இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்
முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை - 2006/2007

ESC 1135/ESC 1124 – ஆக்கக் கல்வியும், அழகியற் கல்வியும் கையாளுந்திறன்களின் விருத்தியும்

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

திகதி: 22.10.2006 நேரம்: பி.ப 1..30 - பி.ப 3.30

ஒவ்வொரு பகுதியிலிருந்து ஒரு வினாவையாவது தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்கட்கு விடை தருக. ஒவ்வொரு பகுதிக்கான விடையும் வெவ்வேறு விடைப்புத்தகங்களில் எழுதப்படல் வேண்டும்

## பகுதி - அ

01. (i) முன்பள்ளி பிள்ளைகளில் காணக்கூடிய ஆக்கத்திறன்கள் மூன்றினை பெயரிடுக.

(3 புள்ளிகள்)

(ii) நீர் குறிப்பிட்ட ஆக்கத் திறன்கள் மூலம் பின்வருவனவற்றை முன் பள்ளி பிள்ளைகள் எவ்வாறு விருத்தி செய்கிறார்கள் என ஆராய்க

(அ) நுண்ணறிவு
(ஆ) உள இயக்கத்திறன்
(இ) மனவெழுச்சி

(12 புள்ளிகள்)

(iii) உமது வகுப்பிலுள்ள முன் பள்ளி பிள்ளையொருவர் உமது திருப்திக்கேற்ப ஆக்கத்திறனை வெளிப்படுத்தாவிடில் அது சம்பந்தமாக நீர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன?

(10 புள்ளிகள்)

02. (i) குழந்தைச் சித்திரத்தின் கட்டங்களைப் பெயரிடுக.

(2 புள்ளிகள்)

(ii) எதன் அடிப்படையில் இக் கட்டங்கள் பிரிக்கப்படுகின்றன?

(3 புள்ளிகள்)

(iii) நீர் குறிப்பிட்ட கட்டங்களுள் ஏதாவது ஒரு கட்டத்தை தெரிவு செய்து, அக்கட்டத்தில் காணப்படக்கூடிய பண்புகளை விளக்குக

(10 புள்ளிகள்)

(iv) அக்கட்டத்திலுள்ள பிள்ளையொன்றின் ஆக்கத் திறனை விருத்தி செய்வதற்கு பெற்றோர்கள் ஆற்றக்கூடிய பங்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி - ஆ

03. (i) பிள்ளைகளின் கவிதைகள் மூலம் விருத்தி செய்யக்கூடிய மொழித்திறன்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) கவிதையொன்று எழுதுக.

நீர் மேலே குறிப்பிட்ட திறன்களை இந்தக் கவிதை தொடர்பாக எவ்வாறு விருத்தி செய்வீர் என விளக்குக.

(15 புள்ளிகள்)

04. (i) பின்வருவனவற்றுள் ஏதாவதொரு தலைப்பில் கதை ஒன்று எழுதுக - காற்று, வானம், பட்டம்

(10 புள்ளிகள்)

(ii) இந்த கதை மூலம் நீர் அடைவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் ஐந்தினைத் தருக.

(5 புள்ளிகள்)

(iii) இந்த நோக்கங்களை அடையுமுகமாக இக் கதையை நீர் எவ்வாறு கூறுவீர் என்பதைப் படிப்படியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி - இ

5. (i) கையாளுந் திறன்கள் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(5 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளில் கையாளுந்திறன்களை விருத்தி செய்வதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கும் ஐந்து நோக்கங்களைக் கூறுக.

(10 புள்ளிகள்)

(iii) நீர் மேலே குறிப்பிட்ட நோக்கங்களுள் ஏதேனும் இரண்டினைத் தெரிவு செய்து, அவற்றை அடைவதற்கு நீர் ஒழுங்குபடுத்தக் கூடிய செயற்பாடுகள் இரண்டினை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. (i) கையாளுந்திறன்கள் சம்பந்தமாக முன்பள்ளி பிள்ளைகளில் காணக்கூடிய ஐந்து குறைபாடுகளை எழுதுக.

(5 புள்ளிகள்)

(ii) நீர் மேலே குறிப்பிட்ட குறைபாடுகளுள் ஏதேனும் இரண்டு பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) முன்பள்ளி பிள்ளைகளின் முன் எழுத்துத் திறன்களை விருத்தி செய்யுமுகமாக நீர் ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடொன்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)